2.12.2020
அசல் வழக்கு எண்:209-2016

வா.சா.1 முருகன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி முதல் விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதி என் மீது தாக்கல் செய்த கேவியட் மனுவின் நகல் வா.சா.ஆ.8. எனது பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் (எண்ணம் 4) வா.சா.ஆ.9. எனது பெயரில் செலுத்தப்பட்ட தண்ணீர் வரி ரசீதுகள் (எண்ணிக்கை.5) வா.சா.ஆ.10. 24.05.1995ம் தேதியிட்ட ஜெயக்குமார் பெயரிலான கிரைய பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.11. 26.05.2004ம் தேதியிட்ட எனது பெயரிலான கிரைய பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.12. (வா.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது ஆட்சேபணை யாதெனில் வா.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யவில்லை என தெரிவிக்கப்பட்டது).
(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி குறுக்கு விசாரணை செய்ய வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).